# சிறுநீரக முறைகேடுகள்: தீவிரமடையும் விசாரணை

**சென்னை, மே 20:** சிறப்புக் குழுவின் அறிவுறுத்தலின்பேரில் சிறுநீரக முறைகேடு சம்பவங்கள் தொடர்பான விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாகவே உறுப்பு மாற்று சிகிச்சைகளில் தொடர்ந்து முறைகேடுகள் அரங்கேறி வருகின்றன.

பொதுவாக, மூளைச் சாவு அடைவோரிடம் இருந்து பெறப்படும் உறுப்புகள் தானம் கோரி ஏற்கெனவே பதிவு செய்தவர்களுக்கு உரிய வரிசைப்படி வழங்கப்படுகின்றன. இந்த நடவடிக்கைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதில் மாநில உறுப்பு மாற்று ஆணையத்துக்கு முழு அதிகாரம் உள்ளது.

அதேவேளையில், உயிருடன் இருப்பவர்கள், தங்களது ரத்த உறவுகளுக்கு கல்லீரல் அல்லது சிறுநீரகத்தை தானமாக அளிக்கும் நடைமுறைகளை கண்காணிப்பதில் சில கட்டுப்பாடுகள் நிலவுகின்றன.

இதைப் பயன்படுத்திக் கொள்ளும் இடைத் தரகர்களும், தனியார் மருத்துவத் துறை சார்ந்த சில நபர்களும், வறுமையில் உள்ளவர்களை உறுப்பு தானம் அளிக்குமாறு மூளைச் சலவை செய்கின்றனர். அவர்களை நோயாளியின் ரத்த உறவு என அடையாளப்படுத்த போலி ஆவணங்களையும் தயார் செய்கின்றனர்.

இதுபோன்ற சம்பவம் நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையத்தில் அண்மையில் அரங்கேறியது. அதுதொடர்பாக விசாரிக்க அமைக்கப்பட்ட டாக்டர் வினித் ஐஏஎஸ் தலைமையிலான குழு, தனது அறிக்கையையும், பரிந்துரைகளையும் அரசுக்கு அளித்தது.

அதன் பேரில் திருச்சி மற்றும் பெரம்பலூரில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு இந்த சம்பவத்தில் தொடர்பு இருப்பது விசாரணையில் உறுதி செய்யப்பட்டது. அந்த மருத்துவமனைகளின் சிறுநீரக மாற்று சிகிச்சை உரிமம் ரத்து செய்யப்பட்டது.

இதனிடையே, மகாராஷ்டிர விவசாயிகளிடம் தமிழகத்தைச் சேர்ந்த மருத்துவர்களும், இடைத்தரகர்களும் சிறுநீரக முறைகேட்டில் ஈடுபட்டதாக மற்றொரு குற்றச்சாட்டு எழுந்தது.

அதனை விசாரிக்க மருத்துவம் மற்றும் ஊரக நலத் துறை கூடுதல் இயக்குநர் தலைமையில் சிறப்புக் குழு அமைக்கப்பட்டது. இந்த நிலையில், அந்த இருவேறு விசாரணைகளும் தற்போது மீண்டும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக மருத்துவம் மற்றும் ஊரக நலத் துறை அதிகாரிகள் கூறியதாவது: சிறுநீரக முறைகேடுகள் தொடர்பான விசாரணையை நிறுத்தி வைக்கவோ அல்லது முடித்து வைக்கவோ எங்களுக்கு அதிகாரம் இல்லை. அதனால், தேர்தல் காலத்தில் அந்த விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டதாக வெளியான தகவல் தவறானது.

தொடர்ந்து விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறோம். தற்போது மேலும் சில உறுப்பு மாற்று முறைகேடு புகார்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதனையும் ஆய்வுக்குட்படுத்தி வருகிறோம். அவை உறுதி செய்யப்பட்டால் அதுதொடர்பான தகவல்கள் வெளிப்படையாக அறிவிக்கப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

# டிப்பர் லாரி –கார் மோதல்: பெண் உயிரிழப்பு

**கோவில்பட்டி, மே 20:** கோவில்பட்டியில் முன்னால் சென்ற டிப்பர் லாரி மீது கார் மோதியதில் பெண் உயிரிழந்தார்.

கோவை மாவட்டம், சுண்டமேடு பகுதியைச் சேர்ந்தவர் ஆறுமுகம் மகன் அன்னசெல்வராஜ் (49). தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வரும் இவர், மனைவி பாலசுந்தரி (44), மகள் பிரபாவதி (23), மகன் மாயாண்டி (21) ஆகியோருடன் கடந்த 18 ஆம் தேதி ஸ்ரீவைகுண்டத்தில் நடைபெற்ற உறவினர் இல்ல திருமண நிகழ்ச்சியில் பங்கேற்று விட்டு புதன்கிழமை ஊருக்குத் திரும்பினர். அன்ன செல்வராஜ் ஓட்டிச் சென்ற கார் கோவில்பட்டி புறவழிச்சாலையில் சென்றபோது, முன்னால் சென்ற டிப்பர் லாரியின் பின்புறம் மோதியதில் பாலசுந்தரி காயமடைந்தார். அவரை மீட்டு கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தனர். அங்கு அவர் உயிரிழந்தார்.

காயமடைந்த அன்னசெல்வராஜ், பிரபாவதி, மாயாண்டி ஆகியோருக்கு கோவில்பட்டியில் அரசு மருத்துவமனையில் முதலுதவி அளிக்கப்பட்டு, மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

விபத்து குறித்து கோவில்பட்டி கிழக்கு போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கோவை, நீலகிரி, ஈரோடு உள்பட 5 மாவட்டங்களுக்கு இன்று 'மஞ்சள்' எச்சரிக்கை

**சென்னை, மே 20:** தமிழகத்தில் கோவை, நீலகிரி, தேனி, ஈரோடு, திண்டுக்கல் ஆகிய 5 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் வியாழக்கிழமை (மே 21) இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்யக்கூடும் என்பதால் இந்த மாவட்டங்களுக்கு 'மஞ்சள்' எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மையம் புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தென்கிழக்கு அரபிக்கடலில் இருந்து மத்திய வங்கக்கடல் வரை லட்சத்தீவு, வடக்கு கேரளம், தெற்கு உள் கர்நாடகம் மற்றும் ஆந்திரம் வழியாக வளிமண்டல காற்றழுத்தத் தாழ்வு பாதை நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் வியாழக்கிழமை (மே 21) முதல் மே 26 வரை இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

குறிப்பாக, கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி, ஈரோடு, திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் வியாழக்கிழமை இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்யக்கூடும். இதனால், இந்த மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் புறநகரின் ஒருசில பகுதிகளில் வியாழக்கிழமை மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.



**நாளை 10 மாவட்டங்களில் பலத்த மழை:** தொடர்ந்து, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், திருச்சி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, வேலூர், ஈரோடு, நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் வெள்ளிக்கிழமை (மே 22) இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்யக்கூடும் என்பதால், இந்த மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**மீனவர்களுக்கான எச்சரிக்கை:** தென் தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா, குமரிக்கடலில் வியாழன், வெள்ளிக்கிழமை(மே 21, 22) சூறாவளிக்காற்று மணிக்கு 60 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும்.

மேலும், தென்மேற்கு வங்கக் கடலின் சில பகுதிகளில் சூறாவளிக்காற்று வியாழக்கிழமை மணிக்கு 65 கி.மீ. வேகத்திலும், அந்தமான் கடல் பகுதிகள், ஏனைய தென்மேற்கு வங்கக்கடலின் அநேக பகுதிகள், தென்கிழக்கு வங்கக்கடலின் அநேக பகுதிகளில் சூறாவளிக்காற்று 60 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும்.

**வெப்ப அளவு:** வட கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அதிகபட்ச வெப்ப அளவு சற்று உயரக்கூடும்.

**மழை அளவு:** தமிழகத்தில் புதன்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக கிருஷ்ணகிரி மாவட்டம் வரதனப்பள்ளியில் 70 மி.மீ. மழை பதிவானது. உளுந்தூர்பேட்டை (கள்ளக்குறிச்சி)– 60 மி.மீ., வெங்கூர் (கள்ளக்குறிச்சி)– 50 மி.மீ., வனமாதேவி, சிதம்பரம், புவனகிரி (கடலூர்), கேஆர்பி அணை (கிருஷ்ணகிரி), நாலுமுக்கு (திருநெல்வேலி)– தலா 40 மி.மீ. மழை பதிவானதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்ச்சி குறைந்த வட மாவட்டங்களில் தீவிர கல்விப் பணி



**சென்னை, மே 20:** பொதுத் தேர்வுகளில் வட மாவட்டங்களில் தேர்ச்சி சதவீதம் குறைந்து வருவதை கருத்தில் கொண்டு அந்த மாவட்டங்களில் கல்விப் பணிகள் மேலும் தீவிரப்படுத்தப்படும் என பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார்.

பத்தாம் வகுப்பு தேர்வு முடிவுகளை சென்னையில் புதன்கிழமை வெளியிட்ட அவர், பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் அனைவருக்கும் வாழ்த்துகள். எதிர்பார்த்த மதிப்பெண் கிடைக்கவில்லையே என மாணவர்கள் சோர்ந்து விடாமல் அடுத்த கட்டத்தை நோக்கி பயணிக்க வேண்டும்.

தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் இடைநிற்றலைக் குறைக்க பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். சமூக, பொருளாதார, தனிநபர் காரணங்களுக்காக பள்ளிக்கு வராவிட்டால் உடனடியாக அந்த மாணவரின் வீட்டுக்கே சென்று ஆய்வு செய்து மீண்டும் பள்ளிக்கு வர வைக்க முயற்சி மேற்கொள்வோம். மெல்லக் கற்கும் மாணவர்கள் மீது கூடுதல் கவனம் செலுத்தி அவர்களை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**மாநில கல்விக் கொள்கை:** மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (எஸ்சிஇஆர்டி) சார்பில் மாநில கல்விக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு 1 முதல் 3 வகுப்புகளுக்கு புதிய பாடத்தின் கீழ் பாடநூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்காக ஆசிரியர்களுக்கு பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, பள்ளிக் கல்வித் துறையில் கடந்த காலங்களில் கொண்டு வரப்பட்ட திட்டங்கள் இப்போதும் தொடரும். ஆசிரியர்களின் ஒத்துழைப்பு, பலம் இல்லாமல் நாம் அடுத்த கட்டத்துக்குச் செல்ல முடியாது. ஆசிரியர்கள் காலிப் பணியிடங்கள் குறித்து நீதிமன்றத்தில் சில வழக்குகள் உள்ளன. இந்த பிரச்னைக்கு நல்ல வழி பிறக்கும் என்றார் அவர்.

இதையடுத்து தென் மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் வட மாவட்டங்களில் தேர்ச்சி சதவீதம் பின்தங்கியிருப்பது குறித்து அமைச்சரிடம் செய்தியாளர்களிடம் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த அமைச்சர், 'பொதுவாக எனக்கு முதலிடம், இரண்டாமிடம் என கூறுவதில் உடன்பாடில்லை. அனைத்து மாணவ, மாணவிகளும் ஒன்றுதான். தென் மாவட்டங்கள் வளர்ந்து வருவது மகிழ்ச்சி. அவர்களுடன் வட மாவட்டங்களும் முன்னேறி வர வேண்டும் என்பதே எனது விருப்பம். தேர்ச்சியிலும் இரு மண்டலங்களுக்கான வித்தியாசம் பெரிய அளவில் இல்லை. மேலும் தவெக அரசு தென் மாவட்டங்கள், வட மாவட்டங்கள் என யாரையும் பிரித்துப் பார்ப்பதில்லை. வட தமிழகத்தில் கல்விப் பணிகள் மேலும் தீவிரப்படுத்தப்படும் என்றார் அவர்.

பத்தாம் வகுப்பு தேர்ச்சியில் திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, விழுப்புரம், சென்னை, ராணிப்பேட்டை உள்ளிட்ட வட மாவட்டங்கள் கடைசி 10 இடங்களைப் பெற்று பின் தங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# சவுக்கு சங்கர் மீதான குண்டர் சட்டம் ரத்து

## தமிழக அரசு உத்தரவு



**சென்னை, மே 20:** யூடியூபர் சவுக்கு சங்கருக்கு எதிரான குண்டர் சட்டத்தை தமிழக அரசு ரத்து செய்துள்ளது. அவரை உடனடியாக விடுவிக்கவும் உத்தரவிட்டுள்ளது.

மிரட்டி பணம் பறிப்பு உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் பலமுறை சவுக்கு சங்கர் கடந்த திமுக ஆட்சியில் கைது செய்யப்பட்டார். ஜாமீனில் பல முறை அவர் வெளியே வந்தார். கடந்த ஏப்ரல் 9-ஆம் தேதி சவுக்கு சங்கர் மீது குண்டர் சட்டம் போடப்பட்டது.

இந்த நிலையில், சவுக்கு சங்கர் மீதான குண்டர் சட்டத்தை ரத்து செய்து தமிழக அரசு புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது. அந்த உத்தரவில்,'சவுக்கு சங்கர் குண்டர் சட்டத்தில் வைக்கப்பட்டதற்கான காரணங்கள் குறித்த விவரங்கள், ஆலோசனை வாரியத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன. இது குறித்து ஆய்வு செய்த ஆலோசனை வாரியம், சவுக்கு சங்கரை தடுப்புக் காவலில் வைப்பதற்கு போதுமான காரணங்கள் இல்லை என்று அறிவித்தது.

அதன்படி, சவுக்கு சங்கருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தடுப்புக் காவல் உத்தரவை அரசு ரத்து செய்கிறது. வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் அவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தாலோ அல்லது ஏதேனும் நீதிமன்றத்தால் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை அனுபவித்து வந்தாலோ தவிர, போதுமான காரணங்கள் இல்லாததால் தடுப்புக் காவலில் இருந்து அவர் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்' என்று அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## பஞ்சாப் நேஷனல் வங்கி
## punjab national bank

கடன் வசூல் பிரிவு, வட்ட அலுவலகம், ஸ்கந்தா என்கிளேவ், எண்.179, சரோஜினி வீதி, ராம் நகர், கோயம்புத்தூர் – 641 009.
போன் : 0422-2238839. மின்னஞ்சல் : cocoimrec@pnb.bank.in

**அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**
**அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏலத்திற்கான பொது அறிவிப்பு : 16.06.2026 தேதி அன்று**
**(காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)**
**முன்வைப்புத் தொகை மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசித் தேதி மற்றும் நேரம் : 16.06.2026 தேதி அன்று, மாலை 3.00 மணி வரை**

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்–ஏல விற்பனை அறிவிப்பு.
பஞ்சாப் நேஷனல் வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/அடுவைக்கப்பட்ட ஆக்கபூர்வ / கொள்நிலை / அடையாள சுவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு உள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ உள்ளபடி', 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்' விற்கப்படும். சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் முன் வைப்புத் தொகை கீழே பட்டியலில் உள்ள விபரப்படியாகும்.
பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கிய வங்கிக்குத் தெரியவந்த ஏதேனும் வில்லங்கங்கள் குறித்த விபரம் : தெரியவில்லை.

**பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் அட்டவணை**

| லாட் எண். | கிளையின் பெயர் மற்றும் கணக்கின் பெயர் மற்றும் கடன்தாரர்/ உத்தரவாதமளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம் | பிணையப்பட்ட அசையாச் சொத்து விபரம் / உரிமையாளரின் பெயர் (சொத்தின் அடமானதாரர்/கள்) | அ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(2)ன் படியான கேட்பு அறிவிப்பு தேதி ஆ) நிலுவைத் தொகை இ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(4)ன் படியான சுவாதீனம் எடுத்த தேதி ஈ) சுவாதீனத்தின் தன்மை அடையாளம் / கொள்நிலை/ஆக்கபூர்வ சுவாதீனம் | 1) ரிசர்வ் விலை 2)முன்வைப்புத் தொகை (EMD) 3) ஏல மடங்குத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | கிளை : RS புரம் (ID : 525910) திரு.R.ஏழுமலை (லேட்) மற்றும் திருமதி.E மோகனபிரியா **கடன்தாரர் /அடமானதாரர் :** திருமதி. E.மோகனப்பிரியா, க/பெ. லேட். திரு.R.ஏழுமலை, செல்வி. E.ஐஸ்வர்யா (லேட். ஏழுமலையின் சட்டபூர்வ வாரிசுதாரர்), த/பெ. திரு. R.ஏழுமலை, (பிரதிநிதியாக E.மோகனப்பிரியா, இயற்கைப் பாதுகாவலர்), மாஸ்டர். E.பரணி (லேட். ஏழுமலையின் சட்டபூர்வ வாரிசுதாரர்), த/பெ. திரு. R.ஏழுமலை, (பிரதிநிதியாக E.மோகனப்பிரியா, இயற்கைப் பாதுகாவலர்), எண்.2/291, லட்சுமி நகர், தாமரைக்குளம், கிணத்துக்கடவு, நல்லட்டிபாளையம், கோயமுத்தூர் – 642 109. (அனைவருக்கும் இவ்விலாசம் பொது). | **(அட்டவணைச் சொத்து) : திருமதி.E.மோகன பிரியா பெயரிலுள்ள சொத்து.** கோயமுத்தூர் பதிவுமாவட்டம், கிணத்துக்கடவு சார் பதிவு மாவட்டம், கிணத்துக்கடவு தாலூகா, நல்லட்டிபாளையம் கிராமத்தில் பட்டா எண்.663ன் படி க.ச.எண்.20/1A, தற்போதைய உட்பிரிவின் படி க.ச.எண்.20/1A3ல் உள்ள 0.38.5 எக்டர் அல்லது 0 ஏக்கர் 95 சென்ட் நிலம், மேலும், க.ச.எண்.21, தற்போதைய உட்பிரிவின்படி க.ச.எண்.21/2ல் உள்ள 0.20.0 எக்டர் அல்லது 0.49 ஏக்கர், பின்னும் க.ச.எண்.22/1A, தற்போதைய உட்பிரிவின்படி க.ச.எண்.22/1A2ல் உள்ள 0.67.5 எக்டர் அல்லது 1.67 ஏக்கர் ஆக மேற்சொன்ன 3 சர்வேக்களங்களிலுமான மொத்தம் 1.26.0 எக்டர் அல்லது 3.11 ஏக்கர் நிலம் வீட்டுமனைகளாகப் பிரிக்கப்பட்டு, ஸ்ரீ நகர் எனப் பெயரிடப்பட்டு, மேற்படி நிலவகைக்கு DTCP யின் அங்கீகார எண்.50/2016 அங்கீகரிக்கப்பட்டதில் குடியிருப்பு எண்கள் 23 மற்றும் 24ன் எல்லைகள் வருமாறு : **மனை எண்.23ன் எல்லைகளும், அளவுகளும் :** பூங்காவிற்குக் கிழக்கு, 23 அடி தென்வடல் லேஅவுட் ரோட்டுக்கு மேற்கு, மனை எண்.24க்குத் தெற்கு, மனை எண்.22க்கு வடக்கு. ஆக மொத்தம் 560 சதுர அடி அல்லது 52.02 சதுர மீட்டர் (அ) 1 சென்ட் 125 சதுர அடி விஸ்தீரண நிலம். **மனை எண்.24ன் எல்லைகளும், அளவுகளும் :** பூங்காவிற்குக் கிழக்கு, 23 அடி தென்வடல் லேஅவுட் ரோட்டுக்கு மேற்கு, மனை எண்.25க்குத் தெற்கு, மனை எண்.23க்கு வடக்கு. ஆக மொத்தம் 586 சதுர அடி அல்லது 54.44 சதுர மீட்டர் அல்லது 1 சென்ட் 151 சதுர அடி. ஆக இரண்டு மனைகளும் சேர்த்து மொத்தம் 1146 சதுர அடி அல்லது 106.46 சதுர மீட்டர் அல்லது 2 சென்ட் 275 சதுர அடி காலி நிலமும், அதற்கான மாமூல் வழித்தட வண்டித்தடப் பொது உரிமைகளும் சேர்ந்த சொத்து. **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் : 10.784139, 77.026278** | அ) 19.09.2023 ஆ) ரூ.17,83,457.23 (ரூபாய் பதினேழு லட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து நானூற்று ஐம்பத்து ஏழு மற்றும் பைசா இருபத்து மூன்று மட்டும்) மற்றும் ஏற்கெனவே வங்கிக்குச் ஏற்பட்டுள்ள கட்டணங்கள் பிற செலவுகள் மற்றும் 28.02.2026 தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகளுடன். (கணக்கு எண். 0289300364584) இ) 06.12.2023 ஈ) அடையாளம் | 1) ரூ.22,00,000/– (ரூபாய் இருபத்து இரண்டு லட்சம் மட்டும்) 2) ரூ.2,20,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) 3) ரூ.25,000/– (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) **மின் ஏலத் தேதி மற்றும் நேரம் : 16.06.2026 (செவ்வாய்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை** |

**மின்–ஏலத்திற்கான நிபந்தனை விபரங்கள்**
இவ்விற்பனையானது பிணைய நலன் (அமலாக்க) விதிகள் 2002ல் சொல்லப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கீழ்க் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.
1. சொத்துக்கள் 'எங்குள்ளதோ அங்கு', 'என்ன உள்ளதோ அது' மற்றும் 'உள்ளதுள்ளவாறே' என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
2. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிணையச் சொத்தின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் நன்கு அறிந்த வகையில் சரியானது, எனினும் அதில் காணப்படும் எந்த ஒரு தவறு, விடுதல் மற்றும் திருத்தத்துக்குப் பொறுப்பாக மாட்டார்.
3. விற்பனையானது கீழே ஒப்பமிட்டுள்ள அலுவலரால் https://baanknet.com இணையதளத்தில் உள்ள மின் ஏல மேடையில் **16.06.2026 (செவ்வாய்க்கிழமை); காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை** நடத்தப்பெறும்.
4. விற்பனை தொடர்பான மேலும் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ள இணைய தளங்களைக் காணவும்.
**https://baanknet.com & www.pnbindia.bank.in**

தேதி : 19.05.2026
இடம் : கோயம்புத்தூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்
பஞ்சாப் நேஷனல் வங்கி

சர்பாஸிச்சட்டம் 2002ன் கீழ் விதி 8(6)–ன் படியான சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பு



## பஞ்சாப் நேஷனல் வங்கி
## punjab national bank

கடன் மீட்பு நிர்வாகக் கிளை (ARMB) : எண்.448A, டாக்டர் நஞ்சப்பா ரோடு.
கோயம்புத்தூர் - 641 018. போன் : 0422 2231314, 0422-2231345. மின்னஞ்சல் : cs4371@pnb.bank.in

**அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**
**அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏலத்திற்கான பொது அறிவிப்பு : 08.06.2026 தேதி அன்று**
**(காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)**
**முன்வைப்புத் தொகை (EMD) மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம் : 08.06.2026 தேதி அன்று பிற்பகல் 3.00 மணி வரை**

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்–ஏல விற்பனை அறிவிப்பு.
பஞ்சாப் நேஷனல் வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/அடுவைக்கப்பட்ட ஆக்கபூர்வ / கொள்நிலை / அடையாள சுவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு உள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ உள்ளபடி', 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்' விற்கப்படும். சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் முன் வைப்புத் தொகை கீழே பட்டியலில் உள்ள விபரப்படியாகும்.
பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கிய வங்கிக்குத் தெரியவந்த ஏதேனும் வில்லங்கங்கள் குறித்த விபரம் : தெரியவில்லை.

**பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் அட்டவணை**

| லாட் எண். | கிளையின் பெயர் மற்றும் கணக்கின் பெயர் மற்றும் கடன்தாரர்/உத்தரவாதமளித்தவர் பெயர் மற்றும் விலாசம் | பிணையப்பட்ட அசையாச் சொத்து விபரம் / உரிமையாளரின் பெயர் (சொத்தின் அடமானதாரர்/கள்) | அ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(2)ன் படியான கேட்பு அறிவிப்பு தேதி ஆ) நிலுவைத் தொகை இ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(4)ன் படியான சுவாதீனம் எடுத்த தேதி ஈ) சுவாதீனத்தின் தன்மை கொள்நிலை/ஆக்கபூர்வ சுவாதீனம் | 1) ரிசர்வ் விலை 2)முன்வைப்புத் தொகை (EMD) 3) ஏல மடங்குத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | **கிளை : திருப்பூர் (055810) (தற்போது கோயம்புத்தூர் ARMBக்கு மாற்றப்பட்டுள்ளது) M/s. அப்பாபில் டிரேடர்ஸ்** **கடன்தாரர் :** **M/s.அப்பாபில் டிரேடர்ஸ்,** எண்.45, ரெயின்போ என்கிளேவ், மைல் கல், கோயம்புத்தூர் தெற்கு, கோயம்புத்தூர் – 641008. **M/s.அப்பாபில் டிரேடர்ஸ்,** எண்.35, TSR லேஅவுட், 2வது வீதி, கொங்கு மெயின் ரோடு, திருப்பூர் – 641607. **திருமதி.ஜம்மாலே கயூம் (பங்குதாரர்)** எண்.45, ரெயின்போ என்கிளேவ், மைல் கல், கோயம்புத்தூர் தெற்கு, கோயம்புத்தூர் – 641008. **திரு.ராதாகிருஷ்ணன் C (பங்குதாரர்)** பழைய கதவு எண்.24/19, புதிய கதவு எண்.73, சலிவன் வீதி, காந்தி பார்க், வார்டு எண்.7, கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர் – 641 001. **திரு.ராதாகிருஷ்ணன் C (பங்குதாரர்)** எண்.35, TSR லேஅவுட், 2வது வீதி, கொங்கு மெயின் ரோடு, திருப்பூர் – 641607. **உத்தரவாதமளித்தவர்: திருமதி.ஷாஹின் ஷெஃபானா,** எண்.55, முல்லை நகர், 3வது வீதி, வடவள்ளி, பாப்பநாயக்கன்புதூர், கோயம்புத்தூர் – 641041. | **(அட்டவணைச் சொத்து) : திரு. C.ராதாகிருஷ்ணன் பெயரிலுள்ள சொத்து (ஆவண எண்.4228/2018) (PAN BUEPR5864G);** கோயமுத்தூர் பதிவு மாவட்டம், கோயமுத்தூர் சார் பதிவு மாவட்டம், கோயமுத்தூர் தாலூகா, கோயமுத்தூர் சலிவன் வீதி, கிழபுற வரிசையில், சேஷகிரியின் சொத்துக்கு வடக்கு, தென்வடல் ரோட்டுக்குக் கிழக்கு, N.P.சாமியின் சொத்துக்குத் தெற்கு, தாசி செட்டியாரின் வீட்டுக்கு மேற்கு. இதனுள் **முதல் தாக்கு,** கிழமேல் 71 அடி, தென்வடல் 11 அடி மற்றும் **இரண்டாவது தாக்கு,** கிழமேல் 127 அடி, தென்வடல் 15 அடி ஆக மொத்தம் 2697 சதுர அடி (ஆவணத்தின் படி) (2686 சதுர அடி – கள அளவீட்டின் படி) நிலம் மற்றும் கட்டிடமும், அதற்கான மாமூல் தடவழி உரிமைகளும் பிற அனைத்து இணைப்புகளும் சேர்ந்த சொத்து. மேற்படி சொத்தின் பழைய கதவு எண்.24/19, புதிய கதவு எண்.73, சொத்து வரிவிதிப்பு எண்கள்.55122320, 79120035, 79120036, மின்சார இணைப்பு எண்கள்.003–001–825, 003–001–2307, 003–001–1795, 003–001–824, 003–001–2305, 003–001–2306. குடிநீர் இணைப்பு எண். 120035. பழைய டவுன் சர்வே எண்.7/294, புதிய டவுன் சர்வே எண்.7/254ல் உள்ள இச்சொத்து, சலிவன் வீதியில் உள்ளது. அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் : **10.998801 N, 76.950295 E** | அ) 09.04.2021 ஆ) **(i) கணக்கு எண். 05585011000225 30.04.2026 தேதி அன்று ரூ.2,27,19,640.88** **(ii) கணக்கு எண். 05587121000713 30.04.2026 தேதி அன்று ரூ.16,44,806.20** **மொத்த தொகை : 30.04.2026 தேதி அன்று, ரூ.2,43,64,447.08 (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்து மூன்று லட்சத்து அறுபத்து நான்காயிரத்து நானூற்று நாற்பத்தேழு மற்றும் பைசா எட்டு மட்டும்)** மற்றும் **01.05.2026** தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகளுடன். இ) 12.11.2025 ஈ) கொள்நிலை (Physical) | 1) ரூ.1,49,60,000/– (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தொன்பது லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) 2) ரூ.14,96,000/– (ரூபாய் பதினான்கு லட்சத்து தொண்ணூற்று ஆறாயிரம் மட்டும்) 3) ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) **மின் ஏலத் தேதி மற்றும் நேரம் : 08.06.2026 (திங்கட்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை** |

**மின்–ஏலத்திற்கான நிபந்தனை விபரங்கள்**
இவ்விற்பனையானது பிணைய நலன் (அமலாக்க) விதிகள் 2002ல் சொல்லப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கீழ்க் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.
1. சொத்துக்கள் 'எங்குள்ளதோ அங்கு', 'என்ன உள்ளதோ அது' மற்றும் 'உள்ளதுள்ளவாறே' என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
2. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிணையச் சொத்தின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் நன்கு அறிந்த வகையில் சரியானது, எனினும் அதில் காணப்படும் எந்த ஒரு தவறு, விடுதல் மற்றும் திருத்தத்துக்குப் பொறுப்பாக மாட்டார்.
3. விற்பனையானது கீழே ஒப்பமிட்டுள்ள அலுவலரால் https://baanknet.com இணையதளத்தில் உள்ள மின் ஏல மேடையில் **08.06.2026 (திங்கட்கிழமை); காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை** நடத்தப்பெறும்.
4. விற்பனை தொடர்பான மேலும் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ள இணைய தளங்களைக் காணவும். **https://baanknet.com & www.pnbindia.in**

தேதி : 19.05.2026
இடம் : கோயம்புத்தூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்
பஞ்சாப் நேஷனல் வங்கி

சர்பாஸிச்சட்டம் 2002ன் கீழ் விதி 9(1)–ன் படியான சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பு